உ

சொரூப சாரம்

★

சிடி பிரிண்டிங் ஒர்க்ஸ்

சென்னை-14

தபால் செலவு தனி] 1971 [பிரசார விலை ரூ. 1

சமர்ப்பணம்

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளது

பாத கமலங்களில் சமர்ப்பணம்.

92-வது ஜெயந்தி விழா

(2—1—1972)

ௐ

ஸ்ரீ குருப்யோ நம.

நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய!

சொரூப சாரம்

சிறப்புரை

'சொரூபசாரம்' என்னும் இச்சீரிய நூல் ஆன்மானுபூதியை விளக்குவதாம். சிறந்த வேதாந்த நூற்களிலொன்றாக மதிக்கப் படுவதுடன் தெலுங்கு ஜெர்மன் முதலிய பிற பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பெற்று எங்கும் பிரசித்தமாக விளங்கும் "கைவல்ய நவநீதம்" என்னும் நூலின் ஆசிரியர் அந்த நூலைச் சிறப்பிக்கையில் :

"படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடன் மொண்டு முன்னூற்
குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாம் காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை
அடைந்தவர் விடயமண்டின் றலைவரோ பசியிலாரே"

என்று கூறுகின்றார். அச்செய்யுளில் வரும் "கைவல்ய நவநீதம்" என்பதைச் "சொரூபசாரம்" எனக் கொண்டால் அந்தச் சிறப்பு இந்நூலுக்கே மிகப் பொருத்தமாம். என்னையெனின், கைவல்ய நவநீத நூல்; (பரதத்துவ விளக்கம்) சாரமாகிய அபவாத உத்தியுடன் சக்கையாகிற (அபரதத்துவ விளக்கம்) ஆரோப உத்தியையும் சேர்த்துக் கூறுகிறது. இந்தச் 'சொரூபசார'மோ கலப்பற்ற சுவானுபூதியையே துலக்கலால் என்க. இத் தெள்ளிய நூலின் தீர்ந்த சித்தாந்தத்தைச் சாத்திய நிலையிலுள்ள தெள்ளியரேயன்றி, ஏனையோர் புரிந்து கொள்வதிலுள்ள அருமையே, இது சாதகரிடை அதிகம் பரவாமைக்குக் காரணம்.

இந்த ஒப்புயர்வற்ற வேதாந்த நூலின் அருமை பெருமைகளை உணர்ந்து இதனை அச்சியற்றிப் பரப்பும் செம்பணியை மேற்கொண்ட அன்பர் M. S. நாகராஜன் அவர்களின் நன்முயற்சி முமுட்சுக்களின் நன்றிக்குரியதாம்.

நடனானந்தா

ௐ

நமோ பகவதே ஸ்ரீ அருணாசல ரமணாய!

ஸ்ரீ ஸ்ரீ சொரூபானந்த சுவாமிகளது திவ்ய சரிதம்

பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த 'வீரமா நகர்' என்னும் திருத்தலத்தில் ஸ்ரீ சொரூபாநந்தர், ஸ்ரீ தத்துவராயர் என்னும் இரு மஹநீயர்கள் வாழ்ந்து வந்தனர். இவருள் பின்னவர் முன்னவருடைய சகோதரியின் புதல்வர். இவ்விருவரும் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லுநர்; சகல சாஸ்திர விற்பந்நர். எனினும் "இந்த அபர வித்தையாற் பெறும் பயன் எத்துணை தான் சிறப்பினதென்றாலும், இது பரவித்தைபோற் பிறவிப் பேறளிக்க வல்லதன்று," என்னும் நல்லறிவும் வாய்க்கப் பெற்றிருந்தமையால், இனியும் இம்மை நலந்தரும் இவ்வபர வித்தையிலேயே காலத்தை விரயம் செய்து பெறலரும் மனிதப் பிறவியை வீணாக்குவது விவேகமன்று என்னும் வைராக்கியம் மேலிட்டு, ஞான சற்குருவை நாடும் நன்முயற்சியில் ஈடுபடத் துணிந்தனர். இவ்வாறு துணிந்த இவ்விருவரும் இருப்பிடத்தை விட்டுப் புறப்படுமுன் தம்மிடையே ஒரு ஏற்பாடு செய்து கொண்டனர். "நம்மில் எவருக்கு முதலில் குருதரிசன பாக்யம் கிட்டுகின்றதோ, அவர் மற்றவருக்குக் குருஸ்தானம் வஹிக்கவேண்டும்" என்பதே அந்த ஏற்பாடு. அதன்படி சொரூபாநந்தர் தென்திசையிலும், தத்துவராயர் வடதிசையிலும் யாத்திரை தொடங்கினர். காவேரிக் கரையிலுள்ள "கோவத்தம்" என்னும் திவ்ய க்ஷேத்திரத்தையடைந்த சொரூபாநந்தர் அதுவரையில் கண்டறியாத மனவமைதி தானாகவே வாய்க்கும் அதிசய அனுபவத்தை யுணர்ந்து "இங்குள்ள யாரோ ஒரு மஹாத்மாவின் சாந்நித்ய விசேஷமே இது" என்னும் முடிவுடையவராய், அதைப்பற்றி ஆங்கிருந்த அறிஞர்களை விசாரித்ததில், ஆங்குள்ள நாணற்புதரின் மறைவில் "ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமி என்னும் மஹான் சதா சமாதியில் மூழ்கியிருப்பார் என்றும், சில மாலை நேரங்களில் வெளிவருவதும் உண்டு" என்றும் கேள்விப்பட்டு, அக்கணமே சற்குருவின் சந்நிதியை யடைந்து ஸ்ரீ சிவப்பிரகாசர் நிட்டை கலையும் வரையில் காத்திருந்து பஹிர்முகப் பட்டவுடன் முறைப்படி வணங்கித் தம்மை ஆட்கொள்ள வேண்டினர். இவ்வாறு குருவனுக்கிரகம் பெற்ற சொரூபானந்தர், தத்துவராயரை எதிர்பார்த்து நின்றனர்.

வடதிசைக்குச் சென்ற தத்துவராயருக்கு அதுவரையில் குருதரிசனம் இடைக்காமையாலும், இனி கிடைக்குமென்ற நம்பிக்கையின்மையாலும் மீண்டும் தென்றிசை நோக்கித் திரும்பி ஸ்ரீ சொரூபாநந்தரைக் காணும் பேறு பெற்றதுடன், அன்னூரால் அநுக்கிரகிக்கவும் பெற்றூர். இங்ஙனம் அவ்விருவரும் குரு-சிஷ்யர்களாய் அமைதியுடன் காலங் கழிக்கையில் குரு ஓர் நாள் தைலமுழுக்கின் நிமித்தம் எண்ணெய் கொண்டுவரப் பணித்தார். அன்று அமாவாசையாதலால், "பித்ருக்கள் தினத்தன்று எண்ணெய் ஸ்நாநம் கூடாது" என்னும் சாஸ்திர விதியை நினைவு கூர்ந்த சீடர் "இன்று அமாவாசை யாயிற்றே" என்றனர். இதனைச் செவிமடுத்த சொரூபானந்தர் "இத்தகை விதிவிலக்குகளெல்லாம் சாதுக்களுக்கு ஏது? இவ்வளவ நாள் நமது சந்நிதியிலிருந்தும் சாத்திரக் கட்டுகளினின்றே விடுபடாத நீ, இனியும் இங்குறைவதால் பெறப்போகும் புருஷார்த்தம் என்ன?" என்னும் வினாக்களின் மூலம் தத்துவராயரின் ஜென்ம சாபல்யத்தில் தமக்குள்ள அவநம்பிக்கையை வெளியிட்டனர். குருவின் இரக்கக் குறிப்பைக் கேட்டுத் துணுக்குற்ற தத்துவராயர். தமக்கு இன்னும் வாசனக்ஷயம் சித்திக்காததை யுணர்ந்து கழிவிரக்கமுற்றவராய் "மேலும் ஈண்டிருந்து சற்குருவின் புனித சாந்நித்யத்தை மாசுபடுத்துவதிலும் இப்பாவக் கட்டையைக் கீழைக் கடலில் ஆழ்த்திவிடுவதே நன்று என்னுந் துணிவுடையராய்க் குருவுக்குப் புறங்காட்டக் கூடாதென்று பின்புறமாகவே நகர்ந்து சென்றனர். குருவைத் தியானித்துக் கொண்டே அங்ஙனம் செல்கையில், அன்னூர் திருவாக்காக வெளிவந்த தத்துவரத்தினங்களையெல்லாம் உடன் சென்ற அன்பர்கள் குறிப்பெடுத்து அவற்றைச் சொரூபானந்தரின் திருமுன் சமர்ப்பித்தனர். சிவப்பிரகாச வெண்பா—தத்துவாமிர்தம்—திருத்தாலாட்டு—அஞ்ஞவதைப்பரணி—மோகவதைப்பரணி முதலிய 18 ஞான நூல்களாக இன்று போற்றப் பெறுபவையே அவை.

அவற்றைக் கண்ணுற்ற சொரூபானந்தர் அவற்றின் பொருட்செறிவை வியந்து இப்படிப்பட்ட கலைக்கடல் ஜலக்கடலில் கலத்தல் நன்றன்று எனத் திருவுளங் கூர்ந்து, தத்துவராயரைத் திரும்பிவரப் பணித்தார். அவர் வந்தவுடன் "இவ்வரிய கிரந்தங்கள் உனக்குப் பயன்படுவதுபோல் உலகுக்கு எளிதிற் பயன்படுவதன்று. ஆதலால் எல்லோரும் உணர்ந்துய்யுமாறு எளிய நூலொன்று செய்" என்று ஆக்ஞாபித்து உணவருந்தச் சென்றனர். குருவாணையைச் சிரமேற் கொண்ட தத்துவராயர் தமது குரு உண்டுவருமுன் "சசிவன்ன போதம்" என்னும் மோகவதைப் பரணியின் பகுதியைப் பாடி முடித்து

குரு காணிக்கையாகச் சமர்ப்பித்துச் சொரூபானந்தரைப் பிரஸந்ந மூர்த்தியாக விளங்கச் செய்தனர்.

அவ்வூரிலுள்ள சில சாஸ்திர பண்டிதர்கள் தத்துவராயரை நோக்கி: "ஓராயிரம் யானைகளைத் தனியொருவனாக நின்று தகர்த்துக் கொல்லும் அசகாய வீரனன்றோ பரணி நூற்குரியவன்? உமது குரு இதுகாறும் என்ன வீர சாகசம் புரிந்துள்ளார்? அவர்மீது பரணி பாடல் எங்ஙனம் பொருந்தும்?" என்று வாதாடத் தொடங்கினர். உடனே தத்துவராயர் "ஏககாலத்தில் அசுர மதங்கொண்ட ஆயிரம் அகங்கார யானைகளை அடக்க வல்லவர் எமது குரு, ஆதலால் நீங்கள் கூறும் சாதரண வீரர்களுக்கெல்லாம் மேலானவரான அசாதரண வீரர் சொரூபானந்தர்" என்று சூளுரைத்தனர். அவ்வமயம் ஆங்கெழுந்தருளிய சொரூபானந்தர் அவண் குழுமியிருந்த அனைவர்மீதும் கடைக்கண் வீசினார். அக்கணமே அனைவரும் மனமிறக்கப் பெற்றவராய் அவச நிலையிற், சமாதியில் மூழ்கினர். சமாதிகலைந்து வெளிப்பட்டவுடன் தமது தவற்றை மன்னித் தருளுமாறு சொரூபானந்தரை வேண்டிக் கொண்டதுடன் பரணிபாடிய தத்துவராயரையும் அவர்கள் பாராட்டினர்.

இறுதிக் காலம் நெருங்குவதைக் கண்ட சொரூபானந்தர், எவ்வித லக்ஷியமுமின்றிக் கால்சென்றவழி காடு மலைகளைக் கடந்தும், நீர்நிலைகளில் ஊர்ந்தும், பிறர் கண்ணுக்குத் தெரியாது மறைந்தருளினர். தனிப்பட்ட தத்துவராயரும் உரிய காலத்தில் வீடுபெற்றனர்.

அத்வைத பரரான ஸ்ரீ சொரூபானந்தர் அஜாதசித்தாந்தர் என்பதை அவரருளிய

"என்னைத் தவிரமற்றிங் கேதுமில்லை என் ஆணை!
பொன்னைத் தவிரவிலாப் பூடணம்போல்—பொன்னைஉரு
வேருக்கிப் பேருரைத்த வேற்றுமைபோல், நம்மையும்அவ்
வாருப் பகுத்துரைத்தோ மால்."

"தன்னிடத்தி லேதோற்றித் தன்னிடத்தி லேயிருந்து
தன்னிடத்தே கூடுஞ் சகத்தெல்லாம்—தன்னைவிட
வேறன் றெனக்காண்பா ரல்லால்இவ் விடுபெற்றார்
மாறென்று காண்பரோ? மற்று."

"அஞ்ஞான மெத்தா லழிந்ததோ! ஆராயும்
விஞ்ஞான மெத்தால் விளைந்ததோ!—மெய்ஞ்ஞானச்
செம்மையனு பூதித் தெளிவுபெற்ற தெங்ஙனே
எம்மையல்லால் ஏதுகண்டோம் யாம்"

என்னும் சொரூப சாரப் பாக்களே புலப்படுத்தும். ஆன்ம விசார சாதகர்க்கு—ஆன்மாநுபூதியைத் தெற்றென விளக்கும் வகையில்—வரப்பிரசாதமாயமைந்த இவ்வரிய நூல், தற்போது கிடைப்பது அரிதாயிருந்தமையால் எனது ஆன்ம சகோதரர்க்கு இதை வெளியிட்டு உதவுமாறு உண்ணின்று என்னைத் தூண்டியது எனையாட்கொண்ட பகவான் ஸ்ரீ ரமணரது கருணையே யென்னும் எனது நிச்சயமே அப்பெருமானது 92-வது ஜயந்தி நாளாகிய 1972-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2-ம் நாள் ஆதிவாரத்தில் பகவத் சந்நிதியிலேயே இதனை விநியோகிக்க விழைதற்குக் காரணமாயிற்று.

இந்நூலைப்பற்றிய அறிவைப் புகட்டியவரும், சிறப்புரை அருளிய சாதுவும், கைம்மாறு கருதாப் பழம்பெரும் ஸ்ரீ ரமண பக்தருமாம் ஸ்ரீ நடனானந்தருக்கு எனது உளங்கனிந்த நன்றி உரியது. மற்றும் இந்நூலை அச்சிட உதவிய அன்பரனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இங்ஙனம் தங்களன்பன்,
காஸ்யப நாகராஜன்.

பின்குறிப்பு :

1. ஸ்ரீ சிவப்ரகாச சுவாமிகளின் சமாதிக் கோயில் திருவலஞ்சுழியிலும்,
2. ஸ்ரீ சொரூபானந்த சுவாமிகளின் சமாதிக் கோவில் திருவருணை—விருத்தகிரிக் கிடையிலுள்ளதோர் இடத்திலும்,
3. ஸ்ரீதத்துவராய சுவாமிகளின் சமாதிக் கோயில் இறும்புதூரிலும் உள்ளனவாய்க் கூறப்படுகின்றன.

இந்நூலை ஸ்ரீ சொரூபானந்தர் இயற்றவில்லை எனச் சில ஆராய்ச்சியாளர் கருதுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அன்னாரின் பிரதம சீடராம் ஸ்ரீ தத்துவராயரோ அல்லது வேறு யாரோ இயற்றியிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு; எனினும் இச் "சொரூப சாரத்தின் சுவையை .... உண்டிருக்க வல்லார் உலகமெல்லாந் தாமாகக் கண்டிருக்க வல்லார்கள் காண்" என்னும் வாக்கு சத்திய வாக்கேயாம்.

சொரூப சாரம்

ஆத்ம ஸ்வரூப வணக்கம்

1. சிற்சொரூபந் தானே செகசொருப மானவெலாந்
தற்சொருப சாரமாச் சாற்றவே—பொற்சொருப
மச்சுருவாம் போல வதுவதுவாய்த் தோற்றுமொரு
சொச்சொருபந் தானே துணை.

நூல்

[சுசாதி விசாதி சுகத பேதமின்மையின், அனைத்துஞ் சித்தே யென வஸ்து நிச்சயம் கூறல்]

2. பூதாதி யைந்து பொறிபுலன்க ளெல்லாஞ்சித்
தேதாதி யந்தமவை யெல்லாஞ்சித்—தோதரிய
கற்பனையுஞ் சித்தனைத்துங் காண்பானுங் காட்சியுஞ்சித்
தற்பமும்வே றில்லாமை யால்.

[இங்ஙன மனைத்துஞ் சித்தென்பதற்கு உத்தியுளதோ வெனில், உளதெனக் கூறல்.]

3. புத்திவிகற் பத்தாற் பொருந்துசக பேதமெலாஞ்
சத்தியம்போற் றோன்றுவது சாட்சியன்றே—முத்திமுதற்
சுத்த மசுத்தஞ் சுகாசுகங்க ளுள்ளதில்ல
தத்தனையுஞ் சத்தாத லால்.

[அங்ஙன மனைத்துஞ் சத்தானல் அவைகள் சச்சிதானந்த மாகிய தனது சொரூபமாகத் தோன்றுகின்றனவா வெனில், அவ்வாறே தோன்றுகின்றன வெனக் கூறல்]

4. பார்த்ததிசை யெல்லாம் பரிபூரண சொருபந்
தீர்த்தமெல்லா மானந்த சிற்சொருபங்—கீர்த்திக்குந்
தோத்திரங்க ளெல்லாஞ் சுகசொருப நம்மையல்லால்
வேற்றுருவ மேதாகு மே.

[இக்கூற்று வசன மாத்திரமா, அனுபவமுண்டோவெனில் அனுபவமுண்டெனல்.]

5. அய்யா சகத்தோற்ற மாதார மெல்லாநீ
பொய்யாது சோதியெனப் போதித்தான்—மெய்யாக
வுற்றுணரி னுனென் றுரையா ரொருவரிலை
முற்றுணர்வா னானே முதல்.

[இவ்வனுபவமாகத் தன்னைத் தரிசித்ததெது, அஃதெப் போதுதித்ததெனில், இவ்வனுபவமென்றுமுளதெனவுந் தானே தரிசித்தவனெனவுங் கூறல்.]

6. நம்மையறி வேவடிவா நாங்கண்டோ நம்மையன்றிச்
செம்மை யுலகத் திரள்காணே—நம்மைநா
முற்றுப்பா ராதிருந்தோ மல்லா லொருகாலு
மிற்றுப்போ னேமோவி யாம்.

[தானே யனைத்துமாயின், நாமம் பலவாவானேனெனில், அதனற்ருன் வேருகா வெனக் கூறல்.]

7. எல்லாரு நானு விருந்துரைப்பா ராகிலெனை
யல்லாம வீச னளவுமிலை—சொல்லாலே
பெற்றமகன் றம்பிப் பிதாப்பே ருரைத்தொருவற்
குற்றவுடல் வேருகு மோ.

[அங்ஙனமாயின், அறிபவனும் அறிபொருளும் வேருகுமே யெனில், ஆகாவெனக் கூறல்.]

8. நாமா யிருந்தோ மு நாமேநா மல்லவாய்ப்
போமாறு போகும் பொருளுநாம்—யாமத்துத்
தானே யுறங்கிச் சகத்துருவாய்த் தோற்றிவிழித்
தானே யவன்போலத் தான்.

[இங்ஙன மனைத்துமாய் விளங்கிய வாத்மாவின் சுபாவஸ்வ ரூபம் யாதெனில், தானே தானய் விளங்குதல் எனக் கூறல்]

9. ஆகமா யாருயிரா யஞ்ஞான மாய்ஞானப்
போகமா யின்பப் பொருளாகி—யேகமாஞ்
சிற்சொருப மாகியெல்லாச் செய்கையுமா நம்முடைய
தற்சொருப மேதான தால்.

[இங்ஙனந்தானாக விளங்கிய வாத்மாவிற்கோருண்மை நாமங் கூடுமோ வெனில், அஃததிதானுபவ மாதலிற் கூறக் கூடா தெனல்.]

10. ஆனந்த மென்பா ரதீதமென்பார் நான்மறைக்குந்
தானந்த மாஞ்சருவ சாட்சியென்பார்—ஞான நூல்
சொன்னகுறி யெல்லாந் தொடராத வென்வடிவுக்
கென்னகுறி சொல்லுவேன் யான்.

[இங்ஙனமதீதமாயின் விசாரணைக் கிடமின்மையின் அதற் கோரடையாளங் கூறல் வேண்டுமெனில், எல்லாமா யல்லவுமா யிருத்தலின் நிர்வசனமாமெனக் கூறல்.]

11. நானே வதுவோ வதுநானே நானதுவோ
ஞானே தயமோநா தாந்தமோ—மோனமோ
சுத்தமோ சூனியமோ தோற்றுஞ் சுபாவநிலை
யித்தனையு மல்லவா மே.

[இங்ஙன் மனிதர் வசனமாகக் கூறின் ஆத்மாவை யறிபவரு மிலதாம்; அந்த ஞானம் பரிபாலனமு மாகாதாம்; ஆதலினதற் கோர் நாமங்கூற வேண்டுமெனில், சுருதிகணியமித்த நாமங் களைக் கூறல்.]

12. புத்தோக முத்தோகம் பூரண னந்தோகஞ்
சத்தோகஞ் சித்தோகஞ் சாந்தோகஞ்—சுத்தோக
மாரணங்க டேடரிய வற்புதோ கஞ்சகல
காரணமாஞ் சைதன்யோ கம்.

[இந்த நாமங்களனுபவமாமோவெனில், அனுபவமுமா யாதீதமுமா மெனக் கூறல்.]

13. சொல்லாச் சுவானுபவா தீதச் சுகானந்த
மெல்லாமு நாமா யிருந்தோமே—தொல்லைவினை
யற்றேமெ னச்சொலவு மற்றேமே நம்மைநாம்
பெற்றேம் பிழைத்தோம் பிளாய்.

[இவ்வனுபவத்தினாற் பயன் யாதெனில், முக்தியுலகிற் கரசனாதெலனக்கூறல்.]

14. சந்ததமு நீங்காத் தனியரசு பெற்றேமே
தொந்தச் சுகாசுகமுஞ் சுட்டோமே—சிந்தனையை
வாட்டியதே காதி வனவாசம் விட்டோமே
வீட்டிற் குடிபுகுந்தோ மே.

[இவ்வரசன் தன்னரங்கில் எந்தவிநோதம் பார்த்திருப்பானெனில், அவத்தாத்திரிய நடனங்களை யெனக் கூறல்.]

15. நனவிற் றசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போங்
கனவின் மனக்கூத்துங் காண்போ—நினைவிற்
சுழுத்தியிலே யில்லாத சூனியக்கூத் தாடி
விழுப்பொருளாய் நாமிருப்போ மே.

[சுகதுக்கங்களை நானென்றிருந்த போதிவ்வனுபவ மெங்கேயெனில், அப்போது நானுயிருந்ததே யன்றி வேறொன்றின்றெனக் கூறல்.]

16. நானென் றிருந்தவனுர் நான்கண்டே னுகிலவ
னுனென் றுருத்தரிக்க வொட்டேனே—ஞான
வடிவான நானேநான் மற்றுளநா னெல்லாம்
படிவான் இறந்துபிறப் பான்.

[நிர்விகாரியான வ்வாத்மா விவகரிக்கிற் பந்தப் படாதோவெனில், சூரியனைப் போலச் சாட்சியாயிருத்தலிற் படாதெனக் கூறல்.]

17. சாயையென வாழ்குடும்பந் தன்னைச் சுமந்தாலு
மாயையெனு மேக மறைத்தாலும்— தூயவொளி
தானுய் விளங்கிச் சகசாட்சி யாயிருக்கு
ஞானுதித் தன்றுனே நாம்.

[ஆதித்தனைப்போல விவன் தொழிற்படாமலிருக்க வில்லையேயெனில், இவனுந் தொழிற்படாமலிருக்கின்றுனெனக் கூறல்.]

18. ஏதேது வந்தாலு மேதேது செய்தாலு
மேதேதி லின்புற் றிருந்தாலு—மேதேதுந்
தானுகா வண்ணந் தனியே தெரிந்திருக்கு
ஞானுகா ரந்தானே நாம்.

[ஆத்மா வசைப்பிக்கச் சகலமு மசைதலின், அதற்குப் பந்தமுள்ளதோயெனில், பம்பரமாட்டுஞ் சாட்டியைப் போலதற்கும் பந்த மின்றெனக் கூறல்.]

19. ஆட்டிவிட்ட பம்பரம்போ லாசைமுத லிக்கரணங்
கூட்டி முடித்தாலுங் கூடோமே—சாட்டியதிற்
சம்பந்த மற்றுமே தற்சொருப மானேமே
யெம்பந்தம் போனவா றே.

[ஆனலஞ்ஞான நீங்கி ஞானம் வந்த வழியாதெனில், சுவானுபவத்தில் நீங்குதல் வருதல் காணுமெனக் கூறல்.]

20. அஞ்ஞான மெத்தா லழிந்ததோ வாராயும்
விஞ்ஞான மெத்தால் விளைந்ததோ—மெஞ்ஞானச்
செம்மையனு பூதித் தெளிவுபெற்ற தெங்ஙனே
வெம்மையல்லா லேதுகண்டோம் யாம்.

[ஞானம் வருதலும் அஞ்ஞானம் போதலும் தெரியாவிடின், அறிஞனென்பதெங்ஙனங் கூடும்? அதற்கோருளவு கூறல்வேண்டு மெனின், மெய்யிற் பொய்போல வறிவிலறியாமை நீங்கி, அவ்விரண்டுமாகியு மாகாதுமிருப்பதே யறிஞனியல்பெனக் கூறல்.]

21. மெய்யெல்லா நாமாய் விளங்கியபின் னுமான
பொய்யெல்லா மெங்கேனும் போனதோ—மெய்பொய்
யிருவகைக்கு நாமே யிடமானேந் தொந்தித்
திருவகைக்கு மெட்டாம லே.

[முன்தேகி நானெனவுந் தேகநானன்றெனவுங் கூறி, இப்போது தேகத்திற்கு வேறுபட்டும் படாமலுமிருப்பனெனவுங் கூறின் உண்மையாதெனின், மாவித்தின் பருப்பைப்போலக் கூடியுங் கூடாமலுமிருத்தலே யுண்மை எனக் கூறல்.]

22. தேகநா மென்றேமே செல்வநம தென்றேமே
போகிநா மென்றேமே பொய்யன்றே—யாகமுதல்
நாமா யிருந்துமெய் நாமசங்ம மானதுமெய்
தேமா வித்தேபோற் றினம்.

[இப்படிப் பற்றியும் பற்றறுதிருத்தல் அஞ்ஞான தசையின் மாத்திரமா ஞானதசையினுமோவெனில், இவ்விரண்டுதசை யிலுமேயெனக் கூறல்]

23. வாலமதி யூகமதி போன்ஞான வஞ்ஞானக்
காலமுநாங் கண்டு கழித்தோமே—சிலமா
மப்போது நம்மிலே யாரோப மானவெலா
மிப்போது பொய்யான வே.

[இவ்வனுபவம் வருதற்கு முன்னுள்ள வஞ்ஞான தசையிற் சனன மரண முண்டோவெனில், அவைகண் மித்தையாதலினின் றெனக் கூறல்.]

24. பொய்தானே யின்பப் பொருளாய்ப் பரம்பரையின்
மெய்யாய்ச் சுகம்போல் விளைந்தக்கா—லையோநா
மெங்கே பிறந்தோ மெதைத்தெய்வ மாய்த்தொழுதோ
மெங்கே யடைந்தோமி யாம்.

[இவ்வனுபவ முதிப்பதற்கு முன்னாத்மா வெப்படி யிருந்த தெனில், தத்தரிசனம் பெற்று நாமுய்ந்தவிடத்தினயற்கிலோ மெனக் கூறல்.]

25. ஆராகி யோவிருந்தோ மார்க்கோவி னுக்குழைத்தோம்
பேரா யிரமாகப் பேதித்தோம்—பூரையினி
நம்மாலே தேடரிய நம்மைநாங் கண்டோமே
யம்மா பிழைத்தோ மடா

[தம்மைத் தரிசிக்கிற் பெறுவது முறுவதும் யாதெனில், மனதன்பிற் கரைதலும், அனைத்துமான தானே சச்சிதானந்த மாதலுமெனக் கூறல்.]

26. கள்ள மனத்தைக் கரைத்துருகப் பெற்றோமே
யுள்ளபடி நம்மை யுணர்ந்தோமே—தெள்ளமுதச்
சச்சிதா னந்தமுநாந் தாமா யிருந்தோமே
யச்செல்லா நாமாகை யால்.

[ஆத்மாவே ஜகத்தென்ப துபசாரமன்றி யுண்மையாகா தெனில், கண்ணைத் தவிரக் காட்சிவேறின்மைபோல, ஆத்மா வைத் தவிரச் சகத்து வேறன்றென்பதுண்மை யெனக்கூறல்.]

27. கண்ணலாற் காட்சியுண்டோ காதலாற் கேட்பதுண்டோ
விண்ணலா லேதும் விரிந்ததுண்டோ—வெண்ணுங்காற்
கானலா றோடிவரக் கண்டதுபோற் றோற்றுகினுந்
தானலா துண்டோ சகம்.

[காண்பானுங் காட்சியும் வேறாகக் காணப்படுகின்றனவே யெனில், பொன்னை யாபரணமாகப் பார்ப்பது போலன்றி வேறின்றெனக் கூறல்.]

28. என்னைத் தவிரமற்றிங் கேதுமில்லை யென்றனைப்
பொன்னைத் தவிரவில்லாப் பூடணம்போற்—பொன்னையொரு
வேறாக்கிப் பேருரைத்த வேற்றுமைபோ னம்மையுமவ்
வாறாப் பகுத்துரைத்தோ மால்.

[இவ்வனுபவ மெத்தன்மைத் தெனில், நினைவைக் கரைத் தெழா நின்றவதிதமாய், அனைத்து நாமாய் விளங்குமெனக் கூறல்.]

29. வாக்கிற்கு மெட்டா மனத்திற்கு மெட்டாது
தேக்கிட்டா லுந்தெவிட்டாத் தெள்ளமிர்த—நாக்கினீ
ரூறல்போ லெம்மிலே யூறியூ மைக்குடம்போல்
வேறறநா மாயிருந்தோ மே.

[அனைத்துஞ் சிவமாயிருக்கவதுவாக வேண்டுமென்பதே னெனில், ஏகமிரண் டென் னும் பேதநீங்கிப் பூரணஞானமாவதற் கெனக்கூறல்.]

30. ஏதுசிவா னந்தமோ வேதுசிவா காரமோ
வேதுசிவன் செயலோ வென்னுதே—யேதும்
பிறிவாகா வொன்ருகாப் பேதமா காத
வறிவா நிறைவே யது.

[அசத்தெனத் தள்ளுதல்யாது, சத்தெனக் கொள்ளுதல் யாதெனில் அறிபொருளையசத்தென நீக்கி அறிவைச் சத்தெனக் கொள்ளுதல் சாந்தமாமெனக் கூறல்.]

31. தானறியுந் தத்துவங்க ளெல்லாந் தனக்கனியந்
தானதுவே யன்றென்று தள்ளுங்கான்—ஞானமாய்த்
தள்ளுமவ னுயிருக்குந் தன்னுற்ரு னென்றுணர்த்து
கொள்ளுமது(வே) சாந்தமா கும்.

[சாந்தமே பொருளாயின் சாட்சியென்பதேதெனில், அதுவே சாட்சி முதற் சுவானுபவாநந்தமாய்ச் சித்தநிலையான சிவமா மெனக் கூறல்.]

32. சாந்தமே தற்சாட்சி தற்சாட்சி யேபிரமம்
போந்த பிரமமே பூரணமா—மாய்ந்துணர்ந்த
சுத்தபரி பூரணமே தோன்ருச் சுவானுபவஞ்
சித்தநிலை தானே சிவம்.

[சித்தமடங்கினுலும் மாயை நசித்தன்ருே சாயுச்சியமாதல் வேண்டுமெனில், சித்தநாசமே மாயாநாசமாதலின் அஃதே சாயுச்சியமாமெனக் கூறல்]

33. சித்தம் பிறந்து செகம்பிறந்து நானெனவோர்
கத்தன் பிறந்தவழி கண்டோமே—சித்த
மடங்காமை யேமாயை யம்மாயை மாய்ப்பார்
திடந்தானே சாயுச் சியம்.

[இதுவே சாயுச்சியமானுல் முன்செய்த கன்மமெங்கே போமெனின், இவ்வனுபவத்திற் போனவிடந் தெரியாமற் போமெனக் கூறல்.]

34. எல்லையற்ற சென்ம மெடுத்தோ மிறந்தோமென்
றல்லலுற்ற பீதி யழிந்தோமே—தொல்லுலக
மெல்லாங் கடுவெளியா யென்வடிவா மென்றன்வடி
வல்லாது பொய்யாத லால்.

[இப்படிப்பட்ட வனுபவமிருக்கக் கன்மஞ் செய்வானே யெனின் இவ்வனுபவமுதியாத போததனைச் செய்வதெனக் கூறல்.]

35. காலங் கருதிக் கடவுளரைக் கைகூப்பிச்
சாலவிர தங்களெல்லாஞ் சாதித்தே—மேலுணர்வா
லீதெல்லா நாமலவென் லெண்ணியனந் தானந்த
போதநா மாகாத போது.

[இவ்வனுபவம் யாவர்க்குறுமெனில், நித்திய முதலிய வற்றைப் பெற்றுச் சுத்தரானவர்க்குறு மெனக் கூறல்.]

36. நித்தியமா யேகமாய் நின்மலமாய்ப் பூரணமாய்ச்
சத்தியமா நின்ருெளிருந் தற்போதஞ்—சுத்தராய்ச்
சித்தநிலை பெற்றவராய்த் தீர்ந்தசென னத்தவரா
யுத்தமரா யுள்ளார்க் குறும்.

[இதில் சுத்தர்க் கடையாளம் யாதெனிலிஃதெனக் கூறல்.]

37. வெட்டெனவும் பேசார் வெகுளார் முகங்கோணு
ரிட்டபதார்த் தம்பெரியோர்க் கேற்றுவைப்பார்—துட்டர்
சேரா ரியாவர்க்குத் திங்குரையார் கண்சிவந்து [களைச்
பாரார் பிறவிதீர்ப் பார்.

(இதுவுமது)

38. பொன்றும் பொருளைப் பொருளாக வும்போற்று
றென்று நலந்தீங் கெடுத்துரையார்—சென்றசில
காரியத்தை நோக்கிக் கழியா ரிழிவுசெய்யா
ராரியரே தாமாகு வார்.

(இதுவுமது)

39. வேத விதியை வெறுத்துரையா ருள்ளளவு
மோத லுருக லொழிந்திரார்—சாதன்
மறவார் கருத்திளகி மண்ணுலகில் வாஞ்சை
பிறவார் பிறவாத பேர்.

(இதுவுமது)

40. சித்த சலனந் திடுக்கெனவுஞ் சற்றுமுறர்
முக்திவழி கேட்கவே மேர்கிப்பார்—புத்திபோய்
மாடுநம் வீடுமனை மக்கள்செல்வ மாச்சரியங்
கூடியழுந் தார்பக்கு வர்.

(இதுவுமது)

41. ஆர்க்கு வருவிருந்தென் றுவனவும் போவனவுந்
தீர்க்கநிலை யன்றித் தெளிவரே—பார்க்குங்காற்
சாந்தராய் நித்தியராய்த் தத்துவபோ தத்தவராய்த்
தீர்ந்தநிலை நின்றார் சிலர்.

(இதுவுமது)

42. சங்கற்ப சாலச் சகத்தோற் றரவையெலா
மிங்கற்ப மென்ன திழிவரே—பங்கமற
விம்மை மறுமை யிரண்டிடத்து மப்பாலுந்
தம்மையன்றிக் காணு தவர்.

[இவர்களுக்கு சாஸ்திர வாசனையாவது அறிவறியாமை வாசனையாவது, மறந்தும் வராதோ வெனில், அஃதுமோர் வாசனையாதலின், வாரதெனக் கூறல்.]

43. சத்தப் பிராந்தி சதசத்தாம் பிராந்தியெலாஞ்
சித்தப் பிராந்தியென்றே தேறுவார்—முத்தர்தா
மாரோப மாகு மவத்தைதொறுந் தோற்றியழி
யாரோபம் பொய்யாத லால்.

[இங்ஙன மாயினிவர்க்கோர் தேவாராதனை யாதெனில் தேகியைத் தரிசித்தலே யெனக் கூறல்.]

44. தேகா லயத்திற் சிதாகாச தேவதையை
வாகாய சாந்தி மலராலே—யேகாந்த
மந்திரத்தாற் பூசைசெயு மாதவரை யாதரித்துச்
சந்ததம்வாழ் வார்க்கார் சரி.

[ஆனால் யாருமிங்ஙனமேன் செய்யவில்லையெனின், அறியாமையாலெனக் கூறல்.]

45. முக்கனியும் பாற்சோறு முன்பிருக்க நாயருந்திக்
கக்கியசோற் றுக்குக் கருதுவா—ரெக்கலைக்கு
மெல்லாப் பொருட்கு மிரும்பொருள்யா மென்னுமல்
வல்லார்க் கடிமைபுகு வார்.

[மஹான்களை அவமதிப்பார் என்னகதி யடைவார் என்பது.]

46. செம்மை யறியார் செகத்தோற் றரவறியார்
தம்மையறியார் வினையுந் தாழ்வறியார்—தம்மிலே
யந்தரராய் வீணே யவமதிப்பார் நல்லோரை
யெந்தவழி போவா ரிவர்.

[பேரின்பத்தைச் சொல்லும் ஞானசாஸ்திரமன்றி யேனைய நூலுண்மை யாகாதொவெனில், ஆகாதெனக் கூறல்.]

47. ஐங்கணையும் பூவா மறுகா லளிநாணு
மென்கரும்பாம் வில்லனங்கன் வீரனும்—வன்காத
லேற்றுவனு மெல்லாம்பொய் யிப்படியே பாமூலகத்
தோற்றமெலா மெய்தானு சொல்.

[ஆனாற் காலமுதலியவை பொய்யோவெனில், ஒன்றிலுஞ் சார்பில்லாதவர்க்குப் பொய்யே யாமெனக் கூறல்,]

48. காலமோ தேவதையோ கன்மமோ மாமாயைச்
சிலமோ விம்மனத்தின் செய்கையோ—கோலியநல்
லுச்சாக மோநலந்தீங் குத்தரிப்ப தேததிலே
யெச்சார்பு மில்லா விவர்க்கு.

[அவைகள் சரீரத்தைக் குறித்தாவது வேண்டாவோவெனில் சரீரமன்னியமாதலின் வேண்டாவெனக் கூறல்.]

49. தன்னைத்தான் தேடாச் சதிகார ரேன்பிறந்தா
ரன்னத்தால் வந்தவுட லார்தாமார்—முன்னம்
விடுத்தவுட லெத்தனையோ மீண்டுமீண் டின்பா
லெடுத்தவுட னூரு யிரம்.

[ஆனுல் யாவருமாபாசர் கடாஞேவெனின், ஆசிரியரறிவிக் காத விடத்தறிவின்மையின், ஆபாசரேயாமெனக் கூறல்.]

50. பொய்யாக்கப் பொய்யைப் பொருளைப் பொருளாக்க
மெய்யாக் குருவொருத்தன் வேண்டிற்றே—யையகோ
பூபால ராகிப் பொலிந்திடுசி வன்களெலா
மாபாச ரென்பதுவே யாம்.

[இவர்களை யாபாசரென்ருல், ஏகமான பிரமம் இங்ஙனம் பேதமாகத் தோற்றுவானேனெனின், ஒன்ருகப் பாராதவர்க் கிப்படித்தோற்றுகின்றதெனக் கூறல்.]

51. ஒன்றிலே தோற்று முலகப் பிரதிவிம்ப
மொன்றுபோற் ருேற்ருத வுண்மையென்ஞே—வென்றும்
பொருளாகப் பாராத புன்மையறி வோர்க்கே
மருளார் பொறிபோல வாம்.

[இங்ஙன மொன்ருயிருக்க வதைத் தரிசியாததற்குக் காரணம் யாதெனில், தானுயிருக்கின்ற தன்னைக் காணுமைக் கேது யாமறிகிலோ மெனக் கூறல்.]

52. தன்னை யறியாமற் ருனே தனைத்தேட
லென்ன புதுமையிதை யென்சொல்வேன்—மண்ணுலகிற்
றண்ணீரி னின்றுகொண்டு தாகந் தணியார்போ
லெண்ணீர்மற் றேதுரைப்போம் யாம்.

[தன்னைத் தரிசிக்கும் மார்க்கம் யாதெனில், சாஸ்திர விசாரத்தின் சாரமான தன்னில் அசைவறச் சும்மாயிருத்தலேயா மெனக் கூறல்.]

53. சாத்திரங்கள் கத்தித் தலைவீங்கு வீர்குலமுங்
கோத்திரமுங் கொண்டுவினை கூட்டுவீர்—சாத்திகரா
யும்மாலே யும்மையுணர்ந் தோயாத் தொழில்விட்டுச்
சும்மா விருக்கொணு தோ.

[ஆனுற்றேவபக்தி ஞானமாமா வெனில், பக்தி செய்பவனன்றிப் பக்தியாகாதெனக் கூறல்.]

54. ஆசித்துத் தெய்வத் தடையாள முங்கொளுத்திப்
பூசித்துக் கைகூப்பிப் போற்றுவார்—நேசிக்குந்
தானேவதுவோ சதிரான தெய்வமென்ன
லூனே டுழல்வா ருளர்.

[ஆனுற்றேர்திருவிழாவைத் தரிசிக்க வேண்டாவோ வெனில் அவற்றைத் தரிசிப்பவனைத் தரிசிக்க வேண்டு மெனக்கூறல்.]

55. தேரைத் திருநாளைச் சேவிப்பார் தம்மைவிட்டங்
காரைத் தொழப்போரா ரையகோ—தேரிடையே
பார்க்கின்ற தெய்வம் பரிபூரணமலவோ
யார்க்குந் தெரியாத தோ.

[ஆனுல் யோகனன்ருே வெனில், அறிவையறிதற்கது வேண்டுவதின் றெனக் கூறல்.]

56. மூலைக்கு ளேயிருந்து மூச்சடக்கிப் பேச்சடக்கிச்
சாலக் கனயோகஞ் சாதிப்பார்—மேலுணர்வு
கண்டிருக்கச் சாதனையேன் காயத்தை யேவவித்திங்
குண்டிருக்க வெண்ணுகிரு ரோ.

[ஆனுற்றுரவு நன்ருமே யெனில், அகம்பாவ நீங்குவார்க்குள்ள சுகம், அதிலின்ருதலால் எங்ஙன நன்ருகுமெனக் கூறல்]

57. கட்டப் படாமல் கரபாத் திரந்தரிப்பார்
மட்டித் தொருகோ வணராவார்—சிட்டர்போற்
றூங்காமற் றூங்குஞ் சுகமும் பெறுவாரே
யாங்கார நீங்குவரா னுல்.

[ஆனுல் சாஸ்திரமும் சாதனமும் வேண்டாமோ வெனில் அவற்றின் சாரமான தன்னைத் தரிசித்தவர்க்கு அவை வேண்டா வெனக் கூறல்.]

58. எச்சாத் திரம்வேண்டு மெச்சா தனைவேண்டும்
பிச்சாட்டல் லோகெடுவாய் பேதையர்க்குப்—புச்சாண்டி
காட்டுவார் போலவந்த கற்பனையை மெய்யன்பா
ராட்டுவார் தம்மைக்கா ணுர்.

[தன்னை யறிவதற்குச் சாதனம் வேண்டாமோவெனில் சாதிப்பவனைக் காணாத சாதனம் யாதுக்கெனக் கூறல்.]

59. ஆண்பெண் ணலியென் றனேக விதமாகக்
காண்பனவு மொன்ருகக் காண்பதுவு—மாண்புடைய
சித்தினது தோற்றமல்லா லுண்டோவிவை தெளியா
ரெத்தனைசா தித்தாலு மென்.

[இங்ஙனம் விசாரித்தறியாமலேன் வருந்துகிருர்களெனில், விசாரித்தொன்றென்றறிந்தபடி அனுபவமாகாமையால் வருந்துகின்ருரெனக் கூறல்]

60. எவ்வா ரெவரிருந்தெ னெவ்வா றெவர்போயென்
னெவ்வாற்கூட் டிற்றனிமை யொத்ததே—யெவ்விதமு
நீங்குவார் நீங்கா நிலையிலனு பூதிகண்டு
தூங்குவார்க் கன்றே சுகம்.

[ஆனல் சிவபர இலக்கணம் தெரிதல் வேண்டாமோ வெனில் அத்துவிதமே சிவமாதலின் அதுவேண்டாமெனக் கூறல்.]

61. விண்ணுருவ மீசனென்பார் வேற்றுருவஞ் சீவரென்பார்
கண்ணு மிரவியும்போற் காணென்பார்—திண்ணமதா
யத்துவித மாகா தவையிரண்டு மாகாத
சித்துருவந் தானே சிவம்.

[ஆனல் சிவத்தையடையும் வழிதான் யாதெனில், அனைத்து மாயையெனத் தள்ளித் தன்னைத் தரிசிப்பதே யாமெனக் கூறல்.]

62. சுத்தஜட மான சுக்கிலங்கெர் பீகரித்துச்
சித்தத் துவங்கலந்து ஜீவித்துச்—சத்தியம்போல்
வந்தபொழு தீதல்லா மாயையென்றே தற்சொருபஞ்
சிந்தைசெய்வா ரன்றே சிவம்.

[ஆனல் திரிகாலங்களையு முணர்ந்தவர் சிவமாகாரோவெனில் காலாதீதமான தன்னைத் தரிசிப்பவரே சிவமாவரன்றி, அவர்களாகாரெனக் கூறல்.]

63. நேற்றின்று நாளையென நிச்சயித் திராப்பகலை
மாற்றுசுயஞ் ஜோதி வடிவாகி—யேற்றபடி
யென்றுமொரு நாளா யிருக்குந் திருநாளைச்
சென்றுதொழு வாரே சிவம்.

[ஞானநூல் முதலியவற்றைக் கைவிடின் நிர்வாண சுக மடைவ தெங்ஙனமெனின், உபசாந்தி யுண்டாய்த் தன்னிற் கவலையின்றிச் சுகிப்பதே முக்தியாதலின் அவைகளாற் பயன் யாதெனக் கூறல்.]

64. ஞானநூல் கற்றாலு(ம்) நற்றுரவு பூண்டாலு
மோன சமாதி முயன்றாலும்—தானுகி
யெல்லாக் கவலையுமற் றின்புற் றிருப்பதுவே
சொல்லாரு முக்திச் சுகம்.

(இதுவுமது)

65. மாகேள்வி பெற்றாலு மாயோக முற்றாலுந்
தேகேந் திரியந் திரிந்தாலு—மாகருணைச்
சேராரு பாசந்தித் தேறுர் பெறுர்பேறு
சோராத முத்திச் சுகம்.

[அங்ஙனமாயின் பிராரத்வமாயினு மனுசரிக்கவேண்டாமோ வெனில், காற்றாடி காலைப்போலத் தானசைவின்றி நிற்கின் அஃது தானே சுழன்று நீங்குமெனக் கூறல்.]

66. இச்சை யநிச்சை பரவிச்சை யோடுழலுங்
கொச்சைப் பிராரத்வக் கூழர்காள்—பிச்சைமுத
லேற்றா ரிடுவா ரிவரென் றுணர்ந்திரேற்
காற்றாடிக் காலாக லாம்.

[ஆனுலிவ்வனுபவம் யாவர்க்கும் வராதோவெனில், பகிர்முக மின்றி யகமுகமாயின் யாவர்க்கும் வருமெனக் கூறல்.]

67. என்னைநான் கண்டபடி யிப்புவியி லெல்லோரும்
தன்னையே காணத் தகுங்காணுஞ்—சொன்னே
னொளிநாட்ட மோடுமன முண்ணாட்டம் பெற்று
வெளிநாட்ட மாகா விடின்.

[ஆனுல் ஞானவான்களுக்கொரு கன்மமும் வேண்டாமோ வெனில், செய்பவனையும் செயலையுங் கண்டுகொண்டிருத்தலால் அவர்க்கது வேண்டுவதின்று எனக் கூறல்.]

68. கன்மந் தவறுமற் காலந் தவறுமற்
சென்மந் தவறுமற் செய்வரோ—கன்மவிதி
செய்வான் செயலிரண்டுஞ் சித்தத்தே கண்டுதெளிந்
துய்வார் பொருளாகு வார்.

[ஞானிகள் கன்மிகளைக் காணின் வெறுப்பரோவெனில், இந்திர ஜாலத்தைக் காண்போரதனைப் பொய்யெனக் கண்டு மகிழ்வதுபோல மகிழ்வரேயன்றி வெறுக்காரெனக் கூறல்.]

69. உள்ளபடி கண்டுகளித் துற்றுருக மாட்டாத
கள்ளரையுங் கண்டு களித்தோமே—கொள்ளையா
விந்திரஜா லக்கமல மெத்தனைபுட் பித்தாலுஞ்
சந்திரனுக் குண்டோ சலம்.

[இவ்வனுபவம் வந்த தெங்ஙனமெனில் ஆசிரியரருளின லிவ்வனுபவந் தெய்விகமாய்க் கிடைத்ததெனக் கூறல்,]

70. திங்கடர்ந்து மேன்மேற் செனித்தகரு வேலடியின்
மாங்கனிவந் துற்றதொப்ப வாய்த்ததே—ஆங்காங்கு
மெல்லாருந் தேடுபொருள் யாமாக வேயருள
வல்லான் றிருந்தான் மலர்.

[ஆனலிவ் வனுபவங் கிடைப்பதித்தனை யருமையோ வெனில் மிகவு மருமையா மெனக் கூறல்.]

71. நானு யிருந்ததெங்கே நானபிமா னித்ததெங்கே
வானுள மண்ணுள வாஞ்சையெங்கே—ஞானகுரு
தேசிகனு ரெங்கே சிவசிவா முக்தியெங்கே
பேசிடவா யெங்கே பிளாய்.

[இவ்வனுபவத்தாற் பெற்றபேறு யாதெனில் சிந்தனுதீத மான தன்னைப் பெறுதலே யெனக் கூறல்.]

72 என்னையே யல்லாமல் யான்பெற்ற தேதுமில்லை
யென்னையான் பெற்றிருந்த தெப்போது—மென்னையன்றிப்
பந்தமில்லை விடுமில்லை பார்க்கிலிவை யாராயுஞ்
சிந்தனையு மில்லாத தே.

[இவ்வவசரத்தில் யாரைத் துதிக்கவேண்டுமெனில், தன்மய மாக வாசிரியர் முதலிய மூன்றினையுந் துதிக்க வேண்டுமெனக் கூறல்.]

73. செப்படிபோற் காட்டியரு டேசிகனை யோவனைத்து
மிப்படிசோ தித்துணர்ந்த வென்னையோ—மைப்படியுஞ்
சென்மமுடி வாகவந்த தேகா லயத்தினையோ
வென்மயமாய்ப் போற்றுவேன் யான்.

[ஸ்தூலதேக வாசனையைத் தள்ளுவ தெங்ஙனமெனில் அன்னமயமெனக் கண்டதனைத் தள்ளல் வேண்டுமெனக் கூறல்.]

74. அன்னமய கோசமா மாகமே யுள்ளளவு
சொன்னபடி கேட்கிற் சுகமடைவா—யென்றனை
கெட்டபாழ் வாசனையைக் கிட்டாதே யாதேனு
மிட்டபடி கண்டே யிரு.

[இந்திரியங்களைக் களைவதெங்ஙனமெனில் அவற்றைத் தன் மயமாகக் கண்டு களைய வேண்டுமெனக் கூறல்.]

75. பொறிகா ளெனைநெடுநாட் போற்றிவளர்த் தீரே
யறிவானந் தப்பொருளு னேனே—பிறிவாகு
மூங்களையு நானு வுணர்ந்துகொண்டே னீங்களினி
யிங்கழியா தொன்று யிரீர்.

[ஆசையை நீங்குதலெங்ஙன மெனில், தற்றரிசனவிச் சையால் நீக்க வேண்டுமெனக் கூறல்.]

76. ஆசையே யுன்னு லலைந்துவிட்டே னென்றுலு
நீசெயுப காரத்தி னின்றேனே—தேசிகனை
யுன்னலடைந்தே னுனைக்கூடி முக்தியினு
மென்னுனை நானுயி னேன்.

[கோபத்தைக் கெடுத்த லெங்ஙனமெனில் உபசாந்தத்தா லெனக் கூறல்.]

77. கோபமே யுன்னுற் குறைதீர்ந்தே னீயெழும்பித்
தாபமே செய்யுஞ் சலிப்பாலே—யாபத்து
நீங்கியுப சாந்தியிலே நின்றேன் கனவிலுநீ
யேங்கியெழும் பாதே யிரு.

[உலோபத்தைப் போக்குவதெங்ஙன மெனில் தன்னிலமைந் திருத்தலாலெனக் கூறல்.]

78. லோபமே யுன்னை யுறவுகொண்டே னுன்னுருவம்
பாவமே யென்பருண்மை பற்றுதார்—நீபெருக
வார்ச்சிக்க வேபடுவா யாபாவி யுன்னுலே
யார்ச்சிக்கப் பட்டே ன்மைவு.

[மனத்தைக் கரைப்பதெங்ஙன மெனின், அதற்காதாரமான வான்மாவிற் கரைக்க வேண்டுமெனக் கூறல்.]

79. நெஞ்சகமே நானேநீ நீயேநா னென்றிருந்தும்
வஞ்சகமா *வென்னை மறந்தனையே—தஞ்ச
முனக்குநா னென்பதுவு முண்மையே யுண்மை
யெனக்குநீ வேறு யிராய்.

(இதுவுமது)

80. ஓடித் திரிந்தா யுழைத்தாய் பிழைத்தவழி
தேடிப் பலகலையுஞ் சிந்தித்தாய்—நாடியொரு
சற்குருவைத் தந்தாயென் சிந்தாய் தயவுசெய்த
நிற்குதவி யென்செய்தே னே.

(இதுவுமது)

81. உன்னுருவாய் நானிருந்த வுண்மைபோ லென்மனமே
யென்னுருவாய் நீவந் திசைந்தாயே—செய்நன்றி
பாராட்டு வாருனைப்போ லுண்டோ பரமபதச்
சீராட்டின் மாரு திரு.

(இதுவுமது)

82. ஆசைவர்க்க மெல்லா மகற்றிப் பொறைமுதலாந்
தாசவர்க்கஞ் செய்யநலந் தந்தனையே—நேசத்தா
லாதிகாலந் தொடுத்தென் னன்புவிடா நெஞ்சேநன்
னீதியா லென்போல நில்.

[இவற்றுன் மனமடங்குமோ வெனின், அனுபவத்திலசையாமனிறுத்த அஃததனுலறிவாக விளங்கி நிற்குமெனக்கூறல்.]

83. என்னெஞ்ச மூருலவ யானுமது போலிருந்து
வின்னஞ் சமமாகா விட்டேனே—யென்னெஞ்ச
மென்போ லசையா திருக்கவது போல்யானும்
பொன்போ லிருந்தேன் பொலிந்து.

---

* பாடபேதம்: உன்னை மறந்தேனே.

[இவ்வனுபவத்தில் விருப்பு வெறுப்பு இல்லையோ வெனில், அனைத்துந் தானயிருத்தலின் இவையின்றெனக் கூறல்.]

84. ஏதுவர வேண்டு மதுவருக வென்னைவிடுத்
தேதகல வேண்டு மதுவகல்க—கோதென்று
பிச்சையுந் தள்ளேன் பிரமபத மும்வேண்டே
னெச்செயலு நானகி னேன்.

[இவ்வனுபவி தெய்வத்தைத் தொழுவானேனெனின், யாவுந் தன்னுருவமாகக் கண்டு வணங்குதலன்றி, வேறு வணக்கமின்றெனக் கூறல்.]

85. எங்கேநான் போற்றுவது மென்னையே தேவதையென்
றெங்கே தொழுவதுநா னென்னையே—யெங்கே
யிருந்துகிடந் தோடுவது மென்னிடத்தே நானே
யருந்துவதுங் கொள்வானு மாம்.

[அறிஞர்க்கெல்லா மிவ்வனுபவந்தானே வெனின் இச்சுவானுபவத்தைத் தவிர வேறொன்றின்றெனக் கூறல்.]

86. தன்னிடத்தி லேதோன்றித் தன்னிடத்தி லேயிருந்து
தன்னிடத்தே கூடுஞ் சகத்தெல்லாந்—தன்னைவிட
வேறன் றெனக்காண்ப ரல்லாலிவ் வீடுபெற்றோர்
மாறென்று காண்பரோ மற்று.

[ஆனலிவர்களிடத்து ராகத்வேஷமுண்டாமோ வெனில் அனைத்துந் தாமாயிருப்பவராதலின் அவர்களிடத்தவை யுண்டாகா வெனக் கூறல்.]

87. ஏதுக்கா சைப்படுவ ரேதுக் ககங்கரிப்பா
ரேதுக்கு மாச்சரிய மெய்துவா—ரேதுக்குந்
தாமே சராசரமாய்த் தானுவா யேழ்புவிக்கு
மாமேரு வொத்துவாழ் வார்.

[ஆனலிவ் வனுபவந் தவருதோ வெனில், ஈஸ்வர சிருஷ்டிகள் பேதித்தாலும் இதுபேதியா தெனக் கூறல்.]

88. மாதிக்கு மாறி மதிகருகித் தீகுளிர்ந்திவ்
வாதித்தன் றெற்குவடக் கானலுஞ்—சோதித்து
முன்னிலைமை யாராய்ந்த முத்தரே யெஞ்ஞான்றுந்
தன்னிலைமை குன்ரு தவர்.

[இவ்வனுபவிகளை யறிகின்ற தெங்஬னமெனின் நலந்தீங்கு களிற் சலியாதிருப்பதே குறியாகக் கொண்டறிதல் வேண்டு மெனக் கூறல்.]

89. பிச்சை முதலாய்ப் பிரமபத மீருக
விச்சை வரினு மிசைந்தா லுஞ்—சொச்ச
நலங்காதார் தாமதுவாய் நாடாதார் சித்தங்
கலங்காதா ரேஞானி காண்.

[ஆனலிவர் துதிநிந்தைகளை யெண்ணுரோ வெனில் எண்ணு ரெனக் கூறல்.]

90. வந்தித் துரைப்பார் வழிபடினும் வன்கணூர்
நிந்தித் துரைத்தாலு நெஞ்சுரூர்—சிந்தையற்று
மேகா டவிவரினும் வெய்யோ னுதித்தாலு
மாகாயம் போல்வா ரவர்.

[இவ்வனுபவிக்குணவு யாதெனில் நேரிட்டதே யுணவாம்.]

91. எந்தெந்தப் போக மெதிராகு மவ்வளவுக்
கந்தந்தப் போக மனுசரிப்பார்—பந்தமற்று
நீதித் தனிநிலையே நிற்பர்கிர ணம்பரவு
மாதித்தன் போலே யவர்.

[இவ்வனுபவியைக் காமாதிச் செருக்கு தொடராததென் னெனின், வாசனக்ஷயம் வந்தபடியால் அவை வாராதெனக் கூறல்.]

92. சித்துருவ மாகிச் செகசாட்சி தாமான
முத்தரைக்கா மாதி முனியாவே—சித்தத்தி
லிங்கற்ப வாசனைக ளெல்லா மெடுத்தருந்திச்
சங்கற்ப மில்லாத தால்.

[இவ்வனுபவிக்கு ஸ்தல முதலியவைகள் வேண்டாவோ வெனில், அவர்களிருப்பிட முதலியனவே யவைகளா மெனக் கூறல்.]

93. எங்கும் பொதுவா யிருக்குமொரு சீவன்முத்தர்
தங்குமிடந் தானே தலவாச—மங்கவர்கள்
பார்வையே தீர்த்தமவர் பாதார விந்தமலர்ச்
சேவையே சாயுச் சியம்.

[ஞானிகளின் செயல் யாதெனின் மெத்தென்ற சொல் முதலியவா மெனக் கூறல்.]

94. மெத்தென்ற சொல்லும் விருப்பமற்ற நோக்குமெலாஞ்
சத்தென்ற நெஞ்சுந் தளர்நடையுஞ்—சித்தத்
தடங்கா மகிழ்வு மனவரதம் பெற்ற
திடந்தானே ஞானி செயல்.

[அறிஞர்கள் சிந்தனை யாதெனில், எல்லாந்தானுகச் சிந்தித் திருப்பதேயெனக் கூறல்.]

95. எல்லா விடத்து மெமைக்கண்டோ மெம்மிடத்தி
லெல்லாமுங் கண்டோமென் றேகமாய்க்—கல்லாமை
கற்ற வனுபூதி கைக்கண்டார் மற்றேது
மற்றார் சீவன்முத்த ராம்.

[அறிஞர்க்கு விதிநிஷேதம் யாதெனில் அவர்கள் தொடுத்தது விதியும், விடுத்தது நிஷேதமுமா மெனக் கூறல்.]

96. தானேக னுகியுப சாந்தனுய் நின்மலனுய்
வானே முதற்றன் வடிவாகு--ஞானி
விடுத்ததொழி லெல்லாம் விலக்காகு மன்றே
னடுத்ததொழி லாசார மாம்.

[அறிஞர்க் காசாரம் பூஜை யாவையெனில், ஞானனு சந்தானமுதலியவைகளா மெனக் கூறல்.]

97. ஞானனு சந்தான ஞானிக்கு நீராட
ஞனுகந்த கோலஞ் சதாசார—மானமற
வாங்கிப் புசிப்பதுவே மாபூஜை சஞ்சாரந்
தீங்கற்ற சுத்தசமா தி.

[அறிஞர்க்குச் செய்காரியந் தவிர்காரியம் வேண்டாமோ வெனில், சிவாகாரமாய் விளங்குகின்றவர்க் கவையிலவா மெனக் கூறல்.]

98. அண்டமெலாந் தானு யறிவு வடிவாகக்
கண்டபரா னந்தசிவா காரருக்குத்—தண்டித்துத்
தள்ளும் பொருளேது தள்ளா விதிவழியே
கொள்ளும் பொருளெதுவா கும்.

[அறிஞர் நடையை நிந்திப்பவர்க்குக் கதியாதெனில் பவ நரகமெனக் கூறல்.]

99. பெற்றபே ரின்பப் பெரியோர் சரித்திரத்தைக்
குற்றமென நாடுங் கொடியோர்கள்—பற்றருக்
கோசகா ரப்புழுப்போற் கோடானு கோடிசென்ம
மேசார்வ ரென்றே மதி.

[அறிஞரைத் துதித்தவர்க்குப் பலன் யாதெனில், அத்துவித ஸ்வரூபமாதெனக் கூறல்.]

100. நித்த நிராகார நின்மலா னந்தமய
சுத்தபரி பூரண சொரூப—வத்துவித
மெல்லாமுந் தாமா யிருப்பார் கருணைபெற
வல்லா ரவராகு வார்.

[ஞானிகளெப்படி விளங்குவார்களெனில், சர்வமுந்தாமாகி சர்வமன்றாக விளங்குவாரெனக் கூறல்.]

101. உள்ளமற்று ருள்ளத் துறுபொருளற் றருள்ளக்
கள்ளமற்றார் ஞானக் கரையற்றார்—தெள்ளமுதச்
சிற்பரமு மற்றார் சிவானுபவந் தானுமற்றார்
கற்பனையு மற்றார்கள் காண்.

இந்நூற்பயன்

102. பருவசா ரத்தாற் பலிக்கு மனுபூதிச்
சொரூபசா ரத்தின் சுவையை—யிருசெவியா
லுண்டிருக்க வல்லா ருலகமெல்லாந் தாமாகக்
கண்டிருக்க வல்லார்கள் காண்.

சொரூபசாரம் முற்றிற்று

ஓம்

இப்பிரதி வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு ரூ. 1-20 (தபால் செலவு உட்பட) அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாகும்.

விலாஸம் :—

M. S. நாகராஜன்,
12, அகஸ்தியர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 59.